00245

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்

சட்டக் கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் 3

தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை II– 2022/2023

LLU3406 – ஆவணங்கள் மற்றும் நியதிச் சட்டங்களைப் பொருள்கோடல் செய்தல்

காலம் : 1 மணித்தியாலம்

---

திகதி: 24.10.2023

நேரம்: பி.ப. 01.30 – பி.ப 02.30

---

மொத்த வினாக்களின் எண்ணிக்கை இரண்டு(02)

**ஒரு (01)** வினாவிற்கு மட்டும் விடையளிக்க.

தெளிவற்ற கையெழுத்திற்கு மாணவர்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. அலோனியாவில் உள்ள பில்ட்வெல் கட்டுமான நிறுவனத்தில் கட்டுமானத் தொழிலாளியான ஒலிவர், 2020 ஆம் ஆண்டில் கட்டுமானத் தளத்தின் மிக உயரத்தில் இருந்து ஒரு சக தொழிலாளி விழுந்ததைக் கண்டார். இந் நிகழ்வு ஒலிவருக்கு கடுமையான மன உளைச்சல் மற்றும் அதிர்ச்சியை ஏற்படுத்தியதுடன், அதே நிலையில் தொடர்ந்தும் பணியாற்றும் அவரது திறனையும் பாதித்தது. அவர் குறித்த கம்பனிக்குள்ளேயே அழுத்தம் குறைவான ஒரு பதவிக்கு தன்னை மாற்றுமாறு கோரினார். ஆனால் அவரது கோரிக்கையை கம்பனி மறுத்தது. மோசமடைந்த மனநலம் காரணமாக 2021 ஆம் ஆண்டு பில்ட்வெல் கம்பனியிலிருந்து அவர் இராஜினாமா செய்தார். அவர் வேலை தொடர்பான சம்பவங்களால் எழுகின்ற காயங்களை உள்ளடக்கிய 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் இழப்பீட்டினைக் கோருகின்றார். குறித்த சட்டத்தின் பாயிரமானது, விளைவாந்தன்மையான காய முகாமைத்துவம் மற்றும் இழப்பீட்டினூடாக பணியாட்களின் உடநலம் மற்றும் நலனைப் பாதுகாப்பதற்கான அதன் நோக்கத்தினை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது. இச்சட்டத்தின் பிரிவு 9 ஆனது பாதுகாப்பு உத்தரவை வேண்டுமென்று பின்பற்றாமையினால் ஏற்பட்ட காயங்கள் தவிர வேலை தொடர்பான நிகழ்வுகளிலிருந்து எழுகின்ற தனிப்பட்ட காயங்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான பொறுப்புடைமையினை தொழில்தருனர்களுக்கு சுமத்துகிறது. எனினும், பிரிவு 17 இன் “தனிப்பட்ட காயம்” என்ற வரைவிலக்கணம் தொடர்பாக ஓர் வாதம் எழுப்பப்பட்டது. பில்ட்வெல் கட்டுமானக் கம்பனியானது, இது முற்றுமுழுதாக உடல்ரீதியான காயங்களைப் பற்றியதோடு இது மனநலம், சொத்து அல்லது நற்புகழுக்கு ஊறை ஏற்படுத்தவில்லை என்று வாதிட்டது.

அலோனியாவின் தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் ஒலிவருக்கு இழப்பீடு செலுத்துவற்கான சாத்தியத்தன்மை தொடர்பாக பரீட்சிக்குக. உமது பரீட்சிப்பானது, தொடர்புடைய விதிகள் மற்றும் தீர்ப்புச் சட்டத்தினால் ஆதாரப்படுத்தப்பட்ட பொருட்கோடலுக்கான உள்ளக உதவிகளின் மீது கவனஞ்செலுத்தியிருக்க வேண்டும்.

(20 புள்ளிகள்)

2. பெரிதும் நெல் வேளாண்மையை முதன்மை வாழ்வாதாரமாக நம்பியிருக்கும் கிட்டத்தட்ட 5000 குடியிருப்பாளர்கள் வசிக்கும் விலோபுறூக் கிராமத்தில் அமைந்துள்ள பசுமை ஆற்றின் குறுக்கே, ஒரு பாரிய நீர்மின் அணையைக் கட்டும் திட்டத்தை கிறீன்வில் அரசாங்கம் முன்மொழிந்திருந்தது. விலோபுறூக் ஆனது வரலாற்று ரீதியான ஒரு செழுமையான கிராமம் என்பதுடன், எவர்வூட் என அழைக்கப்படும் பாதுகாக்கப்பட்ட வனங்களைக் கொண்டுள்ளது, இங்கு பல அருகி வரும் உயிரினங்களின் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த விலங்குகள் சரணாலயம் உள்ளது. இத்திட்டத்தின் முன்மொழிவாளர்கள் இத்திட்டமானது தேசத்திற்கு தூய சக்தியை வழங்குவதோடு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை அதிகரிக்கும் என வாதிடுகின்றனர். கிராமத்தின் சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் மற்றும் உள்ளூர் சமூகங்கள் உள்ளடங்கிய எதிர்ப்பாளர்கள் அணை கட்டுவதனால் கிராமத்தின் குடியிருப்புக்கள் மற்றும் அழிந்துவரும் உயிரினங்களின் சரணாலயம் உட்பட வனப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் என கோருகின்றனர். கிறீன்வில் அரசியலமைப்பானது உயிர் வாழ்வதற்கான உரிமையையோ அல்லது ஆரோக்கியமான சூழலுக்கான உரிமையையோ அங்கீகரிக்கும் நேரடியான ஏற்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. எனினும், அரசியலமைப்பின் உறுப்புரை 17 மற்றும் உறுப்புரை 21(அ) ஆகியவற்றினூடாக உயிர் வாழும் உரிமை உட்கிடையாக காணப்படுவதாக ஆழமான ஆய்வொன்று வெளிப்படுத்துகின்றது. குறித்த கிராமத்தில் வசிக்கும் லாரா என்பவள், அரசியலமைப்பின் உறுப்புரை 17 மற்றும் உறுப்புரை 21(அ) உறுப்புரைகளின் கீழ் தனது உரிமைகள் மீறப்பட்டதாக அரசுக்கு எதிராக அடிப்படை உரிமைகள் மனுவினை தாக்கல் செய்தாள்.

பொருள்கோடலின் சாத்தியமான விதிகளின் அடிப்படையில் மேலுள்ள கூற்றினை மதிப்பிடுக. பொருத்தமான இடங்களில் தீர்ப்புச் சட்டங்களைக் கொண்டு உமது விடையினை ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது.*